செய்தி வெளியீடு எண்: 44 நாள்: 21.01.2013

**<u>அல்லிகுளம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட மாற்றுக்குடியிருப்பு மற்றும் மறுவாழ்வு பற்றிய அறிக்கை</u>**

நேரு விளையாட்டு அரங்கத்தின் விரிவாக்கப் பணிக்காக, தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் குழுமத்திற்கு சென்னை, பெரியமேடு அல்லிகுளம் பகுதியிலுள்ள இடம் தேவைப்படுவதால், அப்பகுதியில் வசிந்த வந்த 152 குடிசைவாழ் குடும்பங்களுக்கு கடந்த 19–01–2013 மற்றும் 20–01–2013 அன்று, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம், ஒக்கியம் துரைப்பாக்கம், கண்ணகி நகர் திட்டப்பகுதியில் மாற்றுக் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு மறு வாழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் 220 சதுர அடி பரப்பளவில், சமையலறை, பொது அறை மற்றும் குளியலறையுடன் கூடிய கழிப்பறை வசதிகளுடன், குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தவணைமுறைத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு ரூ.250/– குடியிருப்புக்கு தவணைத் தொகையாகவும் மற்றும் ரூ.50/– பராமரிப்புக் கட்டணமாகவும், 20 வருடங்கள் செலுத்தும் வண்ணம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

கண்ணகி நகர் திட்டப்பகுதி தகுந்த முறையில் வடிவக்கப்பட்ட ஒரு திட்டப்பகுதியாகும். இதில், மக்கள் வாழ்வதற்குத் தேவையான காற்றோட்டமான காலியிட வசதி மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளான சிறு பூங்காக்கள், சாலை வசதி, தெரு விளக்குகள், குடிநீர், வடிகால் வசதி மற்றும் பாதாள சாக்கடை வசதி முதலியவை தகுந்த முறையில் வாரியத்தால் செய்யப்பட்டுள்ளன. சமூக அடிப்படை வசதிகளான 10 படுக்கைகள் கொண்ட தனியார் மருத்துவமனை, காவலர் சிறார் மன்றத்துடன் கூடிய காவல் நிலையம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்கள், ஆரம்ப–தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிகள், இளைஞர்களுக்கான உடற்தகுதி மையம், தொழிற் பயிற்சி மையம், அரசு பொது சுகாதார மையம், மயான வசதி முதலியவை செய்து தரப்பட்டுள்ளன. மூன்று அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், மாற்று இடம் பெற்றுள்ள குடும்பங்களின் நலவாழ்வு, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக நற்பணியாற்றி வருகின்றன.

கீழ்காணும் முன்முயற்சிகள் தேவையான சுமுகமான வசதிகளுடன் மக்கள் வாழ்வதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. கண்ணகி நகர் மற்றும் அதைத்சுற்றியுள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் மாணவர்தம் விரும்பத்திற்கேற்ப உடனடி பள்ளிப்படிப்பைத் தொடர்வதற்கான அனைத்து முயற்சிகளும் பள்ளி கல்வித்துறை மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2. மாற்றுக்குடியிருப்பு வழங்கப்பட்ட குடும்பங்களுக்கு குடும்ப அட்டைகளை ஒற்றை சாளர முறையில் உடனடியாக மாற்றம் பெற்று குடும்ப அட்டைகளின் மூலம் உணவுப் பொருட்களை பொது விநியோக முறை நியாயவிலைக் கடைகளில் உடனடியாகப் பெறுவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது.

3. உடனடி உணவுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள 152 குடும்பங்களுக்கும் கிராடாய் என்ற நிறுவனத்தின் மூலம் 5 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு, 1 கிலோ சமையல் எண்ணை வழங்கப்பட்டுள்ளது.

4. மக்கள் தங்களது வேலைவாய்ப்பை தொடருவதற்காக மூன்று மாதங்களுக்கு இலவச பேருந்து மாதாந்திர பயணச் சீட்டும், பள்ளி மாணவர்கள் தொடர்ந்து கல்வி பயில குறைந்தது ஒரு வாரத்திற்கு அல்லது பள்ளிகள் இலவச பஸ் பாஸ் வழங்கும் வரை இலவச போக்குவரத்து வசதி கிரடாய் என்ற நிறுவனத்தின் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**